[1982 பிப்ரவரி 18

நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள்.

*வினா எண் 245—திரு. எம் ஆறுமுகம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகா மற்றும் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் தனியார் கொடுக்கும் சம்பளத்தைவிடக் குறைவாகக் கொடுக்கப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதை நிவர்த்தி செய்து ஒரே அளவு சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) விடை அவை முன் @வைக்கப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகம் : இந்த அறிக்கையில், 'தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செடிகள் முதிர்ச்சி அடையா இளஞ்செடிகளாக இருப்பதனால் வருமானம் குறைவாக உள்ளது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேயிலைச் செடிகளைப் பொறுத்தவரையில் வளர்ச்சி அடைந்த செடிகளில் மட்டுந்தான் உற்பத்தி அதிகமாகக் கிடைக்கும் என்பதல்ல. ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் உள்ள செடிகளில் கூட அதிகமான உற்பத்தி எடுக்க முடியும் என்ற நிலையில்தான் தேயிலைத் தோட்டங்கள் இருந்து வருகின்றன. 1980-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் காலாவதியாகக் கூடிய சூழ்நிலையில் தொழிற்சங்கங்கள் சம்பளத்தை மாற்றியமைத்து தனியார் தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுப்பதுபோல் இங்கும் கொடுக்கவேண்டும் என்று கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். எனவே அதை புனர்பரிசீலனை செய்து தனியார் தோட்டங்களில் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதுபோல் இவர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஐந்து ஆண்டிலிருந்து அது பலன் அளிக்கக்கூடிய திட்டம்தான் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது, இங்கே இந்த தேயிலைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டதின் நோக்கமே இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல, இலங்கையில் இருந்து வருகிற தமிழ் மக்களுக்கு, தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்பதற்காக கடன் பெற்று இந்தத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அதனால் கடந்த சில ஆண்டுகளாகவே இது நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டுவருகிறது. அதனால்தான் பல தோட்ட முதலாளிகள் வைத்துக் கொண்டிருக்கிற தோட்டங்களில், அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கிய

@ 425-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

காரணத்தால் அவை பலன் தந்து கொண்டிருக்கின்ற தோட்டங்களாகவும் நாம் இப்போது புதிதாகத் துவக்கி மேலும் மேலும் வளர்த்துக்கொண்டு வருகிற காரணத்தால், பெருக்கிக்கொண்டு வருகிற காரணத்தால் அப்படிப்பட்ட பலன்களைப் பெறமுடியாதிருப்பதாலும் தனியார் தோட்டங்களில் தருகிற கூலியைவிட குறைவாக இருந்தாலும் வேறு பல வசதிகள் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற நிபந்தனை காரணமாக அத்தொழிலாளர்களுக்கு அதிக வசதி செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.20)

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல் தேயிலைத் தோட்டத்திலே நிலைமை இல்லை. ஆனால், இலங்கையிலிருந்து குடியேறிய இலங்கை அகதிகளுக்காக அவைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தாலுங்கூட, அரசு நடத்துகின்ற இந்தத் தோட்டங்களில் நிர்வாகச் செலவு அதிகரிக்கின்ற காரணத்தினால்தான் நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது, அதைக் குறைத்து, லாபத்தை அதிகரித்து, அவர்களுடைய சம்பளத்தை சரிக்கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் என்னிடத்திலே இல்லை, தோட்டங்கள் தொடக்கக் காலத்தில் இருப்பதாலும், அந்தத் தோட்டப் பரப்பை அதிகப்படுத்தி வருகின்ற காரணத்தினாலும், மற்றத் தனியார் தோட்டங்களிலே உள்ள தொழிலாளர்களுக்கு கொடுக்குன்ற வசதியைவிட நம்முடைய தோட்டத் தொழிலாளர்களுக்கு சேர்ந்த உடனே அவர்கள் நிரந்தரமாக்கப்படுவதாலும், அவர்களுக்கு வீட்டு வசதி உடனடியாக செய்து தருகின்ற செலவினங்கள் ஏற்படுகின்ற காரணத்தினாலும் பொதுவாக தேயிலைககு சந்தை விலையில் குறைவு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் இந்த இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தகவல் தந்திருக்கிறார்கள். இருந்தாலும், நிர்வாகத்தினுடைய பளு அதிகமான செலவை ஏற்படுத்துகின்றது என்பதை எடுத்துக் கொண்டாலும், அதேபோல் தொழிலாளர்களுடைய பளுவும் அதிகமாகும்போது செலவு அதிகமாகும், அதனால் நஷ்டம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இலங்கை அகதிகள் இந்தத் தோட்டங்களிலே வேலை கொடுப்பதற்காக இந்தத் தொழில் நடக்கிறது, அந்த வகையிலே போதிய அளவு லாபமடைய வாய்ப்பில்லை, அதனால் நிதிநிலை சரியில்லை என்று சொல்லுகிறார்கள். இன்று தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தனியாராக இருந்தாலும், அதிகமாக ஊதியம் கொடுத்து விடவில்லை. குறைந்தபட்ச சம்பளம் அவர்களால் கொடுக்கப்படுகிறதே தவிர, நியாயமான, வாழ்க்கை நடத்து

வதற்கான சம்பளம் கொடுக்கப்பட வில்லை, எனவே, குறைந்த பட்ச சம்பளத்தை இலங்கை அகதிகளாக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும், அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த குறைந்தபட்ச சம்பளத்தைக் கொடுப்பதற்கு, இண்டஸ்ட்ரியல் வேஜ் என்ற முறையில் தொழிலாளர்கள் அனைவருக்கும் அப்படி கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல. அதைக் கொடுப்பதற்கு என்ன வழி என்பதை ஆலோசிப்பார்களா? அதேமாதிரி, இலங்கை யிலே இருந்து வருகின்ற அகதிகளுக்கு மத்திய சர்க்கார் உதவி கொடுக்கிறது. அந்த உதவியை அதிகப்படுத்துவதற்கு, குறைந்த பட்ச சம்பளம் கொடுப்பதற்கு மத்திய சர்க்காரிடம் உதவிபெற்று இந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் தலைவர்களோடு, தொழிலாளர் களோடு பேசி, தொழிற்துறை அதிகாரிகள், ஆணையாளர் ஆகிய வர்களை வைத்துத்தான் 3 ஆண்டுகள் ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தனியார் தோட்டத்திற்கும், நம் தோட்டத்திற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இல்லை. தனியார் தோட்டங்களிலே ரூ. 11.22 வழங்குகிறார்கள். நம்முடைய தோட்டத்தில் ரூ. 10.02 வழங்குகிறார்கள். ஆனால், தனியார் தோட்டங்களிலே கொடுக்கப்படாத வசதி, நம் தோட்டத் தொழிலாளர்கள் குழந்தைகள் பள்ளிக்குச் சென்றால் ரூ. 15-ம் அவர்களுக்குத் தேவையான புத்தகங்களும் வாங்கித் தருகிறார்கள். சேர்ந்த வுடனே நிரந்தரமாக்கப்படுகிறார்கள், வீடுகள் கட்டித் தரப்படு கின்றன. இப்படி அடிப்படையான வசதிகளை எல்லாம் செய்து தருகிறோம். தனியார் துறையிலே எப்படி நடத்திக்கொண்டிருக் கிறார்கள் என்கிற விவரம் அரசாங்கத்தைவிட, தொழிலாளர் தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும், நாம் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டு மென்பதிலே அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஊதியத்தை கூலியைக் குறைக்க வேண்டுமென்பது அரசின் நோக்கமல்ல. ஆனாலும், மத்திய அரசிடம் சொல்லி நஷ்டத்தைப் பெறமுடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், மத்திய அரசு நஷ்டத்திற்கு தமக்கு உதவி அளிக்காது. ஆனாலும். கடந்த 2, 3 ஆண்டுகளாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1978–79 ஆம் ஆண்டு 43.06 இலட்சம்; 1979–80 ஆம் ஆண்டு 31·91 இலட்சம் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. கடன் வாங்கித்தான் இந்த நிறுவனத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம், 10½ சதவீதம் வட்டியில். மேலும், தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அதற்கான முயற்சிகள் தொடர்ந்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS